# காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவனத்தில் சர்வதேச கருத்தரங்கு



■ புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு முதுகலை பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், நடந்த சர்வதேச அளவிலான கருத்தரங்கில், நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**புதுச்சேரி, மார்ச் 18–**

புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு முதுகலை பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், சர்வதேச அளவிலான கருத்தரங்கு நடந்தது.

புதுச்சேரி சட்டப் பணிகள் மையம், மாசுக்கட்டுப்பாட்டு குழு மற்றும் அறிவியல் தொழில்நுட்பம் இணைந்து 'காலநிலை நீதி மற்றும் சட்ட உரிமைகள், சட்டத்தின் மூலம் பூமியைப் பாதுகாத்தல்' என்ற தலைப்பில், ரூசா நிதியுதவியுடன் இரண்டு நாட்கள் கருத்தரங்கு கல்லூரியில் நடந்தது. ஒருங்கிணைப்பாளர் மேரி ஜோசப் வரவேற்றார். கல்லூரி இயக்குனர் சசி காந்ததாஸ் தலைமை தாங்கி, பசுமைப் போர்வை மற்றும் நிலைத்தன்மைக்காக மரங்களை நடுதல் என்ற தலைப்பில் பேசினார். சேலம் ஸ்வான் அறக்கட்டளை நிறுவனர் சரவணன் தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் நிலவும் மனித விலங்கு' மோதல்கள் குறித்து பேசினார்.

இவர்களை தொடர்ந்து, யமுனா 'காலநிலை மாற்றம்' என்ற தலைப்பிலும், தேன்மொழி 'காலநிலை அறிவியல் மற்றும் காலநிலை மாற்றத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள்' குறித்தும் விவாதித்தனர். பாலாஜி 'இந்திய சூழலில் வானிலை ஆய்வு மற்றும் அதன் தரவுகள்' குறித்தும், ராமசாமி 'சுற்றுச்சூழல் தொடர்பான சட்டங்கள் குறித்தும், கனடாவை சேர்ந்த பேராசிரியர் ஐஸ்வர்யா 'இணைய வழியாக காலநிலை அறிவு மற்றும் நிதி கொள்கை' குறித்து விளக்கினார். கருத்தரங்கில், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

Thimamalar | 18/03/2026 | page no Add 3